முத்தம் குளிக்க வாரீகளா



பாபநாசம் குறள்பித்தன்

முத்தம் குளிக்க வாரிகளா...?

தமிழக அரசின் விருது பெற்ற எழுத்தாளர்

பாபநாசம் குறள்பித்தன்

பாலா புக்ஸ்

G-4, பாலகிருஷ்ணா அபார்ட்மென்ட்ஸ்,
8/97, பெரியார் பாதை,
சூளைமேடு, சென்னை - 600 094.
தொலைபேசி: 98841 28442

❑**MUTHAM KULIKKA VAREEGALA...?** ❑ **PAPANASAM KURALPITHAN** ❑ First Edition 2006 ❑ Pages: 48 ❑ Published by: Bala Books, G-4, Balakrishna Apartments, 8/97, Periyar Pathai, Choolaimedu, Chennai-94 ❑Phone: 98841 28442 ❑ Typeset: Guhan Computers, Chennai-600 078 (94442 92899) ❑ Wrapper Designed by: Mathiraj, Chennai ❑ Printed at: CVSP Offset, Chennai-14.

Rs.15.00

❑முத்தம் குளிக்க வாரிகளா...? ❑ பாபநாசம் குறள்பித்தன் ❑ முதல் பதிப்பு 2006 ❑ பக்கங்கள்: 48 ❑வெளியீடு: பாலா புக்ஸ், ஜி-4. பாலகிருஷ்ணா அபார்ட்மெண்ட்ஸ், 8/97, பெரியார் பாதை, சூளைமேடு, சென்னை-94 ❑தொலைபேசி: 98841 28442 ❑ ஒளி அச்சு: குகன் கம்ப்யூட்டர்ஸ், சென்னை-600 078 (94442 92899)❑ அட்டைப்படம்: மதிராஜ், சென்னை ❑ அச்சிட்டோர்: CVSP ஆப்செட், சென்னை-14.

விலை: ரூ.15.00

முதல் கலை முத்தக்கலை!

பாபநாசம் குறள்பித்தன்

மூச்சுள்ள மனிதன் தோன்றிய நாளிலேயே முத்தக்கலை தோன்றி விட்டது.

இதுதான் முதல்கலை என்றும் சொல்லலாம்.

இந்த முத்தக்கலையை விதைத்ததனால் எத்தனை முடிமன்னர்கள் முடிந்தார்கள்; வாழ்ந்தார்கள்...?

இந்த முத்தத்தால் எத்தனை பேர் வேண்டாத சிக்கலிலே தவித்தார்கள்; தத்தளித்தார்கள்...?

முத்தப் பறிமாற்ற வேளையிலே மாட்டிக்கொண்டவர் எத்தனை பேர்; தலைமறைந்தவர் எத்தனை பேர்...?

முத்த ஆசையினாலே எத்தனை பேர் நீதிமன்றத்தில் நின்றார்கள்; தண்டனை பெற்றார்கள்...?

கள்ளப் பார்வை மட்டுமல்ல, கள்ள முத்தமும் இனிப்பானது; களிப்பானது...

நீங்கள், உங்கள் காதலியை எவ்வளவு நேரம் எப்படி முத்தமிடுவீர்கள்...?

மலரை, தென்றல் தழுவுவது போலவா...? கரையை அலை தொடுவது போலவா...? இல்லை - தேனடையில் தேனைப் பிழிவது போலவா...?

சரி....

இந்த மூத்த முத்தக் கலையின் சித்து விளையாட்டு களைப் பற்றி, இனி இதழ்கள் இனிக்க படிக்கலாம் வாங்க...

நன்றி!

பதிப்புரை

உலகில் மனிதன் தோன்றிய காலத்தில் இருந்தே முத்தக்கலையும் தோன்றிவிட்டது.

முத்தங்களால் விளைந்த விளைவுகளைப் பற்றியும், அதுகுறித்து நடந்த சுவராசியமான நிகழ்வுகளையும் ஆசிரியர் திரு.பாபநாசம் குறள்பித்தன் மிகவும் எதார்த்தமான நிலையில் எழுதி இருக்கிறார்.

உடற்கூறு நிலையில் முத்தங்களால் ஏற்படும் மாற்றங்கள் என்னென்ன என்பதையெல்லாம் ஆய்வுக் குறிப்புகளுடன் எழுதியிருப்பது, படிக்கச் சுவையாக இருக்கிறது.

நீங்களும் படித்துப் பாருங்களேன்.

முத்தம்

- ஈரமுத்தம் தரும்போது
  இமைகள் மூடும்;
  இதயம் பாடும்!
  இது இயற்கை.

ஆதிகாலத்திலும் கள் அருந்துவதை குடும்பப் பெண்கள் தீயச் செயலாகவே கருதினார்கள்.

அதனால் - வெளியில் வேலையின் பொருட்டு சென்று, வீட்டினுள் நுழையும் கணவன் கள் அருந்தி இருக்கிறானா என்பதைச் சோதித்துப் பார்க்க, வீட்டுத் தலைவி அவைன அருகில் அழைத்து, இறுகத் தழுவி, இதழோடு இதழ் சேர்த்து முத்தம் பதித்து, மதுவாடை வருகிறதா என்று பார்ப்பாளாம்.

முத்தம் பிறந்த கதை இப்படி கள்ளின் வழியே ஒருபுறம் இதழ் திறக்கிறது.

இது இப்படி இருக்க....

ஓர் உளவியல் அறிஞர், 'இதயம் விரிகிறது. அப்போது வாய் குவிகிறது. அதனால் ஏற்படும் விளைவே முத்தம்' என்கிறார்.

'சிரியுங்கள் உதடுகளால் நீங்கள் செய்யக்கூடிய இரண்டாவது சிறப்பான செயல் அதுவாகத்தான் இருக்க முடியும். அப்படியானால், முதல் சிறப்பான செயல்...? முத்தம்' என்கிறார், ஒருவர்.

சத்தமின்றி இதழோடு இதழ் துடைக்கும் முத்தத்தை முறையோடு பயன்படுத்துதல் வேண்டும்.

பதிப்புரை

உலகில் மனிதன் தோன்றிய காலத்தில் இருந்தே முத்தக்கலையும் தோன்றிவிட்டது.

முத்தங்களால் விளைந்த விளைவு களைப் பற்றியும், அதுகுறித்து நடந்த சுவராசியமான நிகழ்வுகளையும் ஆசிரியர் திரு.பாபநாசம் குறள்பித்தன் மிகவும் எதார்த்தமான நிலையில் எழுதி இருக்கிறார்.

உடற்கூறு நிலையில் முத்தங் களால் ஏற்படும் மாற்றங்கள் என்னென்ன என்பதையெல்லாம் ஆய்வுக் குறிப்பு களுடன் எழுதியிருப்பது, படிக்கச் சுவையாக இருக்கிறது.

நீங்களும் படித்துப் பாருங் களேன்.

முத்தம்

- ஈரமுத்தம் தரும்போது
இமைகள் மூடும்;
இதயம் பாடும்!
இது இயற்கை.

ஆதிகாலத்திலும் கள் அருந்துவதை குடும்பப் பெண்கள் தீயச் செயலாகவே கருதினார்கள்.

அதனால் - வெளியில் வேலையின் பொருட்டு சென்று, வீட்டினுள் நுழையும் கணவன் கள் அருந்தி இருக்கிறானா என்பதைச் சோதித்துப் பார்க்க, வீட்டுத் தலைவி அவைன அருகில் அழைத்து, இறுகத் தழுவி, இதழோடு இதழ் சேர்த்து முத்தம் பதித்து, மதுவாடை வருகிறதா என்று பார்ப்பாளாம்.

முத்தம் பிறந்த கதை இப்படி கள்ளின் வழியே ஒருபுறம் இதழ் திறக்கிறது.

இது இப்படி இருக்க....

ஓர் உளவியல் அறிஞர், 'இதயம் விரிகிறது. அப்போது வாய் குவிகிறது. அதனால் ஏற்படும் விளைவே முத்தம்' என்கிறார்.

'சிரியுங்கள் உதடுகளால் நீங்கள் செய்யக்கூடிய இரண்டாவது சிறப்பான செயல் அதுவாகத்தான் இருக்க முடியும். அப்படியானால், முதல் சிறப்பான செயல்...? முத்தம்' என்கிறார், ஒருவர்.

சத்தமின்றி இதழோடு இதழ் துடைக்கும் முத்தத்தை முறையோடு பயன்படுத்துதல் வேண்டும்.

சில நாடுகளில் அறையில் நடக்க வேண்டிய இக்கலை, அம்பலத்தில் நடக்கவும் செய்கிறது.

ஆமாம், இப்போது இது சில நாட்டில் வீதிக்கே வந்துவிட்டது.

வீதிக்கே வந்தால்கூட முறையானதாக இருந்தால் பரவாயில்லை. முரண்பட்டதாக அல்லவா இருக்கிறது...?

ஸ்காட்லாந்தில் தற்போது பள்ளியில் படிக்கும் பெண் பிள்ளைகள் தான் விரும்பும் பையன்களுக்கு வகுப்பறையிலும், பள்ளி வளாகத்திலும் கட்டிப் பிடித்து முத்தம் கொடுக்கிறார்கள். பின் ஆண் பிள்ளைகள் மட்டும் சும்மா இருப்பார்களா, என்ன...?

இதைத்தடுக்க ஸ்காட்லாந்து பப்ளிக் பள்ளி தலைமையாசிரியர், ஜான்ராபர்ட்சன் ஒரு உத்திரவுப் போட்டிருக்கிறார். அதற்கு 'ஆறு அங்குல உத்தரவு' என்று பெயர்.

இதன்படி மாணவி, மாணவர்கள் தமது வகுப்பு இருக்கையில் குறைந்தபட்சம் ஆறு அங்குல இடை வெளி விட்டே உட்கார வேண்டுமாம்.

ஸ்காட்லாந்தில் இப்படி என்றால், ஜப்பானில் எப்படி என்பதையும் பாருங்கள்...

ஜப்பானில் இன்று காதலர்கள் - திருமணத் தம்பதியினர் நடுத்தெருக்களில் முத்தம் கொடுத்துக் கொள்வது சர்வசாதாரணமாக நடக்கத் தொடங்கி விட்டது.

இதற்கு அங்கேயுள்ள வயது முதிர்ந்தவர்கள் ஒன்றுகூடி கடும் எதிர்ப்பைத் தெரிவித்தாலும், இளசுகள் அதையெல்லாம் காதில் போட்டுக் கொள்ளாமல் - தங்கள் இதழ்களுக்கு வேலை கொடுத்துக் கொண்டு தானிருக்கிறார்கள்.

இவர்கள் இப்படி இருக்கும்போது, ஒருவர் முத்தம் கொடுத்து சிறைக்கும் போய் இருக்கிறார் என்பதையும் நம்புங்கள்.

நியுஜெர்ஸி என்ற நகரில் மிஸ்டர் ஜார்ஜ்ஷீட் என்பவரின் மனைவி தன் கணவர் தன் விருப்பம் இல்லாமல் முத்தமிட்டார் என்று கோர்ட்டில் முறையிட்டாள்.

கோர்ட் அவருக்கு 25 பவுன் அபராதம் போட்டது. பின் நன்னடத்தை ஜாமினில் வெளிவந்தார். நீதிபதி ''மனைவியின் சம்மதத்தைப் பெற்றே முத்தமிட வேண்டும்'' என்று உத்தரவிட்டார்.

அதற்குப் பிறகும், அவரும் சும்மா இல்லை, அவளும் சும்மா இல்லை...

மீண்டும் அவள் கோர்ட்டிற்குப்போய், 'தன் கணவன் கணக்கில்லாதபடி முத்தமிட்டதாக' முறைப்பாடு செய்தாள்.

நீதிபதி இப்படி தன் தீர்ப்பைக் கூறினார்:

''ஒரு நாளைக்கு பத்துமுறை அதாவது காலை முதல் மதியம் வரை ஐந்து முத்தமும், மாலை முதல் இரவுச் சாப்பாட்டுவரை ஐந்து முத்தமும் இட வேண்டும்'' என்று.

அவள் கணவனும் அவ்வுத்தரவுக்குக் கீழ்ப் படிந்து கையெழுத்துப் போட்டாராம்.

முத்தம் நீதிமன்றத்திற்கு மட்டுமா அனுப்பி வைக்கும்...?

தலையை அறுக்கப் போகிறது அடுத்து வரும் முத்தம்...!

- முத்தம்
வியர்க்காத உதட்டில்
விளைகின்ற கனி!

முத்தம் கொடுத்தால், ஒவ்வொரு முத்தமும் ஒருவரின் வாழ்வில் 18 நொடிகளைக் குறைத்து வருகிறது என்று ஒரு ஆய்வு கூறுகிறது.

இந்த ஆய்வு ஒருவரின் ஆயுளைக் குறைக்கிறதோ இல்லையோ, ஆனால், முத்தத்தால் ஒருவரின் ஆயுளே முடிந்து போனது என்பது உங்களுக்குத் தெரியுமா...?

17-ஆம் நூற்றாண்டின் இறுதியில் இரண்டாவது ராஜாசிங்கன் காலத்தில் இலங்கையில் இது நடந்தது....

போர்ச்சுகீசியனான டாஸ்கன் தன் அறிவாலும், ஆற்றலாலும், குணநலன்களாலும், ராஜாசிங்கனின் அரசவையில் மந்திரி பதவியேற்றான் என்றும், அரண்மனையில் சிறப்பாக வரவேற்கப்பட்டு ராணி யின் காதலனானான் என்றும் (1959-இல் வெளிவந்த 'இலங்கைத்தீவு என்ற நூல்) வரலாறு கூறுகிறது.

நாட்டில், அரசன் அரசாட்சியை நல்ல முறையில் நடத்திக் கொண்டிருக்கும் வேளையில் -

ராணியும், டாஸ்கனும், 'சரச' ஆட்சியை நாளும் நாளும் முத்த முகவுரையோடு காதல் காவியமே எழுதிக் கொண்டு இருந்தார்கள்.

இந்த ஒத்தட காவியம் ஒவ்வொரு நாளும் நடந்தது; தொடர்ந்தது.

இவ்வேளையில் ஒருநாள் ராணி நோயில் படுத்தாள். துடித்தான் அரசன்.

மருத்துவர்கள் வந்தார்கள், ஜோதிடர்கள் ஏடு களைப் புரட்டினார்கள். இருந்தும் ராணியின் உடல் நலம் பெறவில்லை.

பிறகு, ஜோதிடர்களின் ஆலோசனைப்படி பலி (பேய் நடனம்) நடத்த முடிவு செய்தார்கள்.

அதற்காகக் களி மண்ணில் ராணியின் உருவச் சிலை தயாரிக்கப்பட்டது.

அந்தச் சிலையைக் கண்ட டாஸ்கன் ''பலியின் முழுப்பலன் கிடைக்க வேண்டுமானால், சிலையின் ஒவ்வொரு அங்கமும் உண்மையான பிரதியாக இருக்க வேண்டும்'' என்றான்.

சிற்பிகள் சினந்தார்கள்...! ''எந்த வகையில் இந்த சிலை முழுமை பெறவில்லை என்கிறீர்கள்?'' கேட்டார்கள். அரசனும் அதையே கேட்டான்.

''ராணியின் தொடையிலுள்ள மச்சம் இந்தச் சிலையில் காணப்படவில்லையே...'' என்றான், டாஸ்கன்.

டாஸ்கன் கூறியதைக் கேட்ட அரசன் ஆடிப் போனான். தான் அறிந்திருந்த மச்சம் இவனுக்கு எப்படித் தெரிந்தது... இதயம் வியர்த்தது.... உடனே -

''இவனை சிரச்சேதம் செய்யுங்கள்'' என்று கட்டளை பிறப்பித்தான்.

உடன் காவலர்கள் டாஸ்கனைச் சூழ்ந்தார்கள்; வளைத்துப் போனார்கள்... காவலர்கள், தண்டனையை நிறைவேற்றக் காத்திருக்கும் வேளையில், ராணி தன் துக்கத்தையும், துயரத்தையும் தோழி வழியே தெரிவித்தாள்.

ராணியின் உள்ளமறிந்த டாஸ்கன் தன் எண்ணத்தை கவிதை வடிவிலே இப்படி பதிலளித்தான்....

“நிறைவேறாத காதலுக்காக ராவணன் பத்துத் தலைகளைக் கொடுத்திருக்க, அமுதம் போன்ற உன் முத்தங்களைப் பெற்ற நான், உனக்காக ஒரு தலையை ஏன் கொடுக்கக் கூடாது...?”

கொலைக் களத்திற்கு அழைத்துச் சென்றபோது, ராணி அவன் செல்வதை சாளரத்தின் வழியாகப் பார்த்தபோது, இந்தக் கவிதையை, டாஸ்கன் கூறியதாக கருதப்படுகிறது.

அதேவேளையில் - ராணியின் இதயம் பேசியவை இவை...

‘ஆ...! நாம் சந்தித்ததும், என் இதழ்த் தேனை நீங்கள் பருகியதும், இந்தச் சாளரத்தில் அல்லவா...?’

“என் காதலரே! இப்பொழுது பயணம் போகிறீரே...! எனக்காக உமது உயிரைக் கொடுக்கப் போகிறீரா...?” என்று டாஸ்கனின் முத்தத்தில் நனைந்த அந்த முழு நிலவு, கண்ணீர் சிந்தினாளாம்.

இப்படி முத்தம் ஈமச் சடங்கை நடத்தி வைத்த நிலையில் - ஈரான் நாட்டு திருமணச் சடங்கு எப்படி என்பதைப் பார்ப்போம்....

ஈரான் திருமணத்தில் ஆணுக்கும், பெண்ணுக்கும் எல்லாச் சடங்குகளும் முடிந்து, திருமணப் பத்திரத்தில் கையெழுத்து பதிந்து விருந்து நடந்த பின் -

பெண், கணவன் வீட்டிற்குச் செல்லும்போது, தாங்கள் வளர்த்த பெண் பிரியப் போகிறாளே என்று எண்ணி உற்றார், உறவினர், பெற்றோர்கள் கண் கலங்கி கண்களில் மழை தொடரும்போது, மணப் பெண் அனைத்துத் தரப்பினருக்கும் முத்தமழை பெய்துவிட்டு, விடைபெற்றுச் செல்வாளாம்.... இப்படி ஒரு சடங்கு ஈரானில் இருக்கிறது.

அன்பு கொண்டவர்கள் ஒருவருக்கொருவர் மட்டும் முத்தம் கொடுப்பதோடு நிற்பது இல்லை... பின்....

அவர்கள் விரும்பும் பொருள்களுக்கு மட்டும் முத்தம் கொடுப்பது இல்லை....

கழுதைக்குக்கூட முத்தம் கொடுக்கலாம் என்பதை அறிய ஆவலா, அடுத்த அத்தியாயம் செல்வோம்.

● காதல் புத்தகத்தின்
முன்னுரையே
முத்தம்தான்!

காரியம் ஆகும்வரைதான் நம்மில் சிலர் கழுதை யானாலும் காலைப் பிடிப்பார்கள்.

''ஆனால், கழுதையை முத்தம் கொடுக்க மாட்டார்கள்... இல்லை, கொடுப்பார்கள்!''

ஷோபியா என்ற பெயரையுடைய ஸ்பெயின் நாட்டு ராணி மிகவும் செல்லமாக ஒரு கழுதையை வளர்த்து வருகிறாள்.

தினசரி இந்தக் கழுதையுடன் முத்தம் கொடுத்து விளையாடிவிட்டுத்தான் மறுவேலையையே செய்வாள்.

ஐஹஸ் என்ற பெயரை உடைய இந்தக் கழுதைக்கு அரண்மனையில் ஏகப்பட்ட மரியாதையாம்.

இருக்காதா என்ன? ராணியின் முத்த மழையில் அல்லவா அந்தக் கழுதை நனைகிறது.

(அது ஆண் கழுதையா? பெண் கழுதையா...? அந்தக் குறிப்பு இல்லை.)

16-ஆம் நூற்றாண்டில், இத்தாலி நாட்டில், வடக்கு அட்ரியாட்டிக் கடற்கரை நகரான ரேவன்னாவில், கைடெரெல்லா என்ற வீரனுக்கு சிலை வைக்கப் பட்டுள்ளது.

இதுவரை, அந்த வீரனனின் சிலையை முத்தமிட்டவர்களின் தொகை 40 இலட்சம் பேர் இருக்கலாம் என்று சொல்கிறார்கள்.

அந்த வீரனின் சிலையை ஆண்கள் யாரும் முத்தமிடவில்லையாம். முத்தம் இட்ட அனைவரும் பெண்கள்தானாம்.

அதிலும் மணமாகாத இளம் பெண்கள்தானாம். அதுசரி, இந்தச் சிலையை இளம் பெண்கள் முத்தமிட என்ன காரணம்...?

சுமார் ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் ஒரு நம்பிக்கை ஏற்பட்டது. அதாவது, இச்சிலையை முத்தமிட்டால் இளம்பெண்களுக்கு, அவர்கள் விரும்பியபடியே நல்ல கணவன் வாய்ப்பான்....

அமைதியான குடும்பம் அமையும். நல்ல குழந்தை பிறக்கும். அதிர்ஷ்டம் ஏற்படும், என்ற ஒரு நம்பிக்கை ஏற்பட்டு, அது நாடு முழுவதும் பரவியது.

இப்பழக்கம் நாளடைவில் உலகம் முழுவதிலும் உள்ள இளம் பெண்கள் அதை நம்பத் தொடங்கிவிட்டனர்.

அதன் விளைவுதான், இந்த முத்தமிடும் படலம்.

(அட, மூடநம்பிக்கை எல்லா நாட்டிலும் ஒழியவில்லையே என்று எண்ணத் தோன்றுகிறதா...?)

சிலையை மட்டும்தான் முத்தமிட வேண்டுமா...? ஏன், காரை முத்தமிடக் கூடாதா? என்பதுபோல் நியூ மெக்ஸிகோவில் நடந்து இருக்கிறது.

நியூமெக்ஸிகோவின் சாண்டா.ஃ.பே நகரில் 'யூகோ' என்ற கார் விற்கும் கம்பெனி ஒரு போட்டி நடத்தியது....

அந்த நிறுவனம் விற்பனை செய்யும் 'யூகோ' காரை அதிக நேரம் முத்தமிட வேண்டும், இதுதான் போட்டி. போட்டியில் 'யூகோ' காரை 35 மணி நேரம் தொடர்ந்து முத்தமிட்டு ஒரு புதிய காரையும் 'காரை முத்தமிடுபவர்களின் ராணி' என்ற பட்டத்தையும் தட்டிச் சென்றவர், ரெபக்கா அர்சுலெதா என்ற பெண்.

எப்படி இத்தனை மணி நேரம் தொடர்ந்து உங்களால் ஒரு காரை முத்தமிட முடிந்தது என்று கேட்டதற்கு, தன் கணவனை முத்தம் இடுவதாகக் கற்பனை செய்து, இப்போட்டியில் வெற்றி பெற்றதாக, இதழ் திறந்திருக்கிறாள்.

தொடர்ந்து, காரை முத்தமிட்டு காரையே பரிசு பெற்றப் பெண்ணைப்போல் -

நினைத்த போதெல்லாம் தன் இதழ்களை ஈரப்படுத்திக் கொள்ள நினைத்த ஒரு ஆய்வறிஞரின் செயலைப் பாருங்களேன்....

●

ஜெர்மன், விஞ்ஞானி ஹான்ஸ்வான்குலேக் என்பவருக்குச் சொந்தமானவள் ஒரு பேரழகி.

அறிவியல் அறிஞருக்கோ, அவ்வப்போது காதலி யின் - மனைவியின் இதழ் தேவை.

முல்லைப்பூ என்பதால், அதை எப்போதும் மூக்கிலே கட்டித் தொங்கவிட்டுக் கொண்டிருக்க முடியுமா...? என்பதுபோல் காதலி.

ஆனால், பாவம் மனிதர். தினமும் படாதபாடு பட்டிருப்பார்போல் இருக்கிறது.

இல்லை என்றால் அந்த முடிவிற்கு வந்திருக்க மாட்டார், அறிஞர். எந்த முடிவிற்கு...? தொடருங்கள்...

தானே பிரம்மாவாக இருந்து ஒரு அழகிய ரோபோ பேரழகியை உருவாக்கிவிட்டார்....

அதுவும் எப்படி...? ஓர் ஆணின் 'எல்லா' தேவை களையும் பூர்த்தி செய்யும் அளவுக்கு முழுக்க முழுக்க எலக்ட்ரானிக் முறையில், பெண்ணின் உடலைப் போலவே வடிவமைத்துவிட்டார்.

அத்துடன் விட்டாரா...?

காபி போட, சின்னச் சின்ன வேலைகள் செய்யும் படி அந்த ரோபோவை வடிவுமைத்ததோடு -

அவருக்குத் தேவைப்படும்போதெல்லாம் முத்தம் தரவும் ரிமோட் சிஸ்டம் அமைத்திருந்தார்.

ஒவ்வொரு வேலைக்கும் ஒரு எண். அந்த எண்ணை அழுத்தினால் போதும் நல்ல மனைவியைப் போல சண்டை போடாமல் அது சமத்தாக வந்து அவரது தேவைகளை செய்துவிடும்.

அவர் அடிக்கடி 'மூடு' அவுட்டாகும்போது அழுத்தும் எண். முத்தத்திற்கு உரியதுதானாம்.

எப்படி எல்லாம் முத்தப் பறிமாற்றம் நடக்கிறது...?

இது இப்படி இருக்க, உஸ்மான் அய்யூப் என்ற மலேசியரிடம் 15 அடி நீளமுள்ள கருநாகம் இருக்கிறது. பாம்பு வித்தைக்காரரான இவர், நிகழ்ச்சியில் கடைசி யாகப் பாம்பிற்கு 'இச்' சென்று அதன் வாயில் முத்தம் கொடுத்து விழாவிற்கு வந்திருக்கும் அனைவரையும் அசத்திவிடுகிறார்.

அடுத்து வரும் முத்தம், ஓர் உயிரையே காப்பாற்றியுள்ளது.

முத்தம்

● எச்சிலைத் தின்று
பசியாற முடியுமா...?
முடியும் -
முத்தத்தால்!

ஸ்பெயின் நாட்டின் தலைநகரமான மாட்ரிட்டைச் சேர்ந்த இளைஞன், ஜான் கார்லோஸ்.

வாழ்க்கையை வெறுத்த இந்த இளைஞன் தற்கொலை செய்துகொள்ள முடிவு செய்தான்.

அதன்படி, ஓர் உயரமான ஆற்றுப்பாலத்தில் இருந்து கீழே குதித்து உயிர் விடுவது என்று தீர்மானித்தான். இதுகுறித்து காவல் துறைக்கும் தகவல் கொடுத்துவிட்டான்.

இளைஞன் பாலத்தின் மீது நின்று கீழே குதிக்க முயன்றபோது சற்று தொலைவிலிருந்து... 'நில்லுங்கள்' என்று ஒரு குரல் கேட்டது.

குரல் வந்த திசையை நோக்கிப் பார்வையைத் திருப்பினான், இளைஞன் கார்லோஸ்.

அங்கே... ஓர் இளம் அழகி நின்று கொண்டிருந்தாள். அவளே பேசினாள்....

"சாவதுதான் சாகிறீர்கள், சாவதற்கு முன்னால் என்னைக் கட்டிப்பிடித்து, ஒரு முத்தம் கொடுங்கள்" என்று வேண்டிக் கேட்டுக் கொண்டாள்.

இளைஞனுக்கு ஒன்றும் புரியவில்லை. ஒரு நிமிடம் திகைத்து நின்றான். அந்த வேளையில் அவனுள் சபலம் குடியேறியது. அவன் கால்கள், அழகியை நோக்கி நடந்தன. அவளை ஆரத்தழுவி அழுத்தமாய் அவளது இதழில் முத்தம் பறித்தான் - பதித்தான்.

அவ்வளவுதான்...

இந்த நிலைக்கு வலைவிரித்து மறைந்திருந்த காவலர்கள் பறந்து வந்து, இளைஞனான கார்லோசைக் கைது செய்தனர்.

முத்தத்தால் உயிர் பிழைத்த இளைஞன் கார் லோஸ் பின், கம்பி எண்ணிக் கொண்டிருந்தான்.

இவன் வந்தவர் யார் என்று அறியாமல் முத்த மிட்டு அவதிப்பட்டான்.

இங்கே ஆள் யார் என்று தெரியாதபடி யார் யாரோடும் முத்தமிட்டுக் கொள்ளலாம் என்பதுபோல் ஒரு நிகழ்ச்சி....

ஜெர்மன் நாட்டில் கார்னிவல் விழா என்று மக்கள் உற்சாகத்துடன் ஒரு விசித்திரமான விழாவை கொண்டாடுகிறார்கள்.

இந்த விழா பிப்ரவரி கொண்டாடப்படுகிறது. எல்லா வயது மக்களும் உற்சாகத்தோடு கலந்து கலக்கும் விழா இது....

இந்த விழா காலத்தில் ஆண், பெண், குழந்தைகள் ஆகியோர் தங்கள் முகம் தெரியா வண்ணம் மாறு வேடம் தரித்துக் கொள்வார்கள்.

விசித்திரமான உடைகளை விநோதமான தோற்றத்துடன் ஆடிப்பாடிக் கொண்டு - மேள தாளங்களை முழக்கிக் கொண்டு ஊர்வலமாக சாரி சாரியாகச் செல்வார்கள். அந்த நேரத்தில் யாரும் எது வேண்டுமானாலும் செய்யலாம்.

நாட்டின் மிகப் பெரிய அதிகாரியின் மனைவி, தெருக் கூட்டும் தொழிலாளியைக் கட்டிப்பிடித்து முத்தமிடலாம்.

அதேபோல் அந்தஸ்து பதவி வேறுபாடுகளைக் கவனிக்காமல் யாரும் யாருடைய மனைவியுடன் கைகோர்த்து சேர்ந்து ஆடலாம்; பாடலாம். முத்தமிட்டு கொண்டாட்டம் போடலாம்.

அன்றைய தினம் என்ன நடந்தாலும் ஒரு குற்றமாகக் கருதக் கூடாது என்பது அந்நாட்டில் ஒரு சம்பிரதாயம் வழக்கமாக இருக்கிறது.

இப்படி பொது இடத்தில் முத்தமிட்டுக் கொள் வதை அந்த நாட்டில் வேண்டுமானால் கண்டு கொள்ளாமல் விடலாம் - ஆனால், வங்க நாட்டில்...? .

வங்காள நாட்டில் கணவன், மனைவி என்றாலும் பொது இடத்தில் முத்தம் கொடுக்கக் கூடாது. கொடுத்தால்....?

1999-இல் டாக்கா பூங்காவில் திருமணமான ஜோடி ஒன்று இரவு நேரத்தில் முத்தம் கொடுத்ததைப் பார்த்த காவலர்கள், இவர்களை 5 மணி நேரம் சிறையில் வைத்தனர். பிறகு விடுவித்தனர்.

இருந்தாலும், இவர்கள் கோர்ட்டிற்கு வந்து ரூ.1000 கட்ட வேண்டும்.

ஒரு முத்தத்திற்கு ஆயிரம் ரூபாய் அபராதம்...!

கணவன், மனைவியிடையே கருத்து வேறுபாடு வந்து பிரிந்துபோக முத்தமே ஒரு நாட்டில் முன் நிற்கிறது...

ஆமாம்! ஆப்பிரிக்கா கண்டத்து மொராக்கோ நாட்டில் ஒரு குறிப்பிட்ட இன மக்களிடம், உலக மக்கள் பலரிடமும் இல்லாத பழக்கம் இருந்து வருகிறது.

ஒரு வீட்டில் வாழும் கணவன் மனைவியிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு, சண்டை பெரிதாகிவிடும் சந்தர்ப்பங்களும் உண்டல்லவா...?

அப்படி மனைவிக்கு கணவனைப் பிரிந்து சென்றுவிட வேண்டும் என்று தோன்றினால், அடுத்த வீட்டுக்காரனுடைய அல்லது யாருடைய வீட்டுக் குள்ளும் நுழைய உரிமை உண்டு.

அவ்வாறு நுழைந்ததும், அந்த வீட்டினுடைய மேல் தளத்தினைத் தாங்கி நிற்கும் தூணைக் கட்டித் தழுவி, முத்தமிட்டு விடுவாளேயானால், அந்த வீட்டின் உரிமையாளன் அவளை மணந்துகொள்ள வேண்டும்.

மேலும், அவள் எந்தக் கணவனிடம் கோபித்துக் கொண்டு வந்துவிட்டாளோ, அவனுக்கு நஷ்ட ஈடாக புதுக்கணவன் தொகையும் கொடுக்க வேண்டும்.

தூணைக் கட்டித் தழுவும் பெண்ணை கட்டாயம் மணக்கும் ஆணின் நிலை எப்படி இருக்கும்...?

இது போகட்டும். கின்னஸில் ஆட்டமும், ஓட்டமும், நீச்சலும்தான் இடம்பிடித்து இருப்பதாக எண்ண வேண்டாம். முத்தமும் கின்னஸில் இடம் பதித்திருக்கிறது.

● இதழ் மேடை
நான்கில்
அரங்கேறும் நாடகம் -
முத்தம்!

உழைப்பைப் பெருக்கினால், உற்பத்தி பெருகும். வீடும், நாடும் நலம் பெறும்.

அறிவியல் சாதனை, ஆக்கப்பூர்வமான சாதனைகள் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெறலாம்.

இங்கே, அதரச் 'சாதனை'களும் அல்லவா கின்னஸில் இடம் பிடித்திருக்கிறது...

ஸ்பெயின் நாட்டிலுள்ள அல்கலாடி ஹெனாரஸ் என்ற நகரில் உள்ள மைதானத்தில் 1600 ஜோடிகள் ஒரே நேரத்தில் கூடினர்.

கூடியவர், ஒருவருக்கொருவர் கட்டிப் பிடித்து இதழோடு இதழ் பதித்து முத்தமழை பொழிந்தனர்.

இதில், அந்நகரத்து மேயரும், அவரது மனைவியும் அடக்கம்.

இந்த 'சாதனை' நிகழ்ச்சி கின்னஸ் புத்தகத்திலும் இடம் பிடித்துவிட்டது.

இந்தக் கூட்டு முத்தம் நடக்கக் காரணமாக இருந்த நிகழ்ச்சி எது தெரியுமா...?

1966-ஆம் ஆண்டு காதலர் தினமான பிப்ரவரி 14-ஆம் தேதி அமெரிக்காவில் உள்ள மைனே பல்கலைக்கழக மைதானத்தில் 1,420 ஜோடிகள் முத்தம் கொடுத்து கின்னஸில் இடம் பிடித்து இருந்தார்கள்.

இதை முறியடிக்கவே ஸ்பெயின் நாட்டினர், மேலே செய்த 'சாதனை'.

இதுவும் சாதனை முத்தம்தான்.

மாஸ்கோ பூங்கா ஒன்றில் 482 ஜோடிகள் ஒன்றுகூடி முத்தமிட்டுக் கொண்டார்கள்.

இந்த சாதனை கின்னஸில் இடம் பிடித்ததோடு, ரஷ்யா நேசனல் ரிகார்டிலும் இடம் போட்டுள்ளது.

ஸ்பெயின், அமெரிக்கா, மாஸ்கோ மக்களைப் பார்த்து, உங்களுக்கு சளைத்தவர்கள் நாங்களல்ல என்பது போல் - பிரான்ஸ் நாட்டினர், பாரீஸ் நகர் அருகில் உள்ள லாடிபன்ஸ் என்ற இடத்தில் 1,118 ஜோடிகள் ஒன்று கூடினார்கள். பிறகு என்ன...? அங்கே முத்த மழைதான் பெய்தது.

நீங்கள் எல்லாம் பத்து நிமிஷம் இருபது நிமிஷம் தானே முத்தம் கொடுத்து - அதுவும் கூட்டமாக இருந்து சாதனைப் படைத்தீர்களா...? நாங்கள் அப்படி சாதனை படைக்க விரும்பவில்லை என்பது போல் ஒரு ஜோடிக்கிளிகள் செய்ததைப் பாருங்கள்...

பாரிஸில், விடாராச்சாஸ் - கைட்டே என்ற இளம் ஜோடி, ரஷியாவில் இருந்து பிரிந்த லித்வேனியா நாட்டைச் சேர்ந்தவர்கள்.

50 மணி நேரம் தொடர்ந்து முத்தமிட்டு உலகில் நீண்ட நேரம் முத்தமிட்டவர்கள் இவர்கள் என்று முத்தப் போட்டியில் வென்றார்கள்.

போட்டியில் வென்ற இந்த ஜோடிகள், எகிப்து நாட்டுக்கு சுற்றுலா பயணமாக போய் வரவும், 35 ஆயிரம் ரொக்கப் பரிசையும் பெற்றார்கள்.

இவர்கள் இப்படி பரிசு பெற்றார்கள். அடுத்தப் போட்டியையும் காண்போம்...

1996-இல் ரஷியாவைச் சேர்ந்த விதுவேனியா நகரில் முதன்முறையாக காதல் தினம் கொண்டாடப் பட்டபோது, ஒரு புதுமையானப் போட்டியை பால்டிக் நியூஸ் ஏஜென்ஸி என்கிற வானொலி நிலையம் ஏற்பாடு செய்து இருந்தது.

என்ன போட்டி...? தொடர்ந்தாற்போல் நாற்பது மணி நேரம் முத்தமிட்டுக் கொண்டிருக்க வேண்டும். இதுவே போட்டி.

பதின்மூன்று ஜோடிகள் முத்தக் கடலில் நீந்த முன்வந்தார்கள்.

ஒவ்வொரு மணி நேரத்திற்கும் பத்து நிமிடம் ஓய்வு எடுத்துக் கொள்ளலாம் என்று கொஞ்சம் விதிமுறையை தளர்த்தியும் இருந்தார்கள்.

பிறகென்ன...? ஜோடிகள், இதழ்கள் சேர்க்கத் தொடங்கினார்கள்.

கலந்தகொண்ட ஜோடிகளை கண்காணிக்கத் தனி ஜூரிகளை ஏற்பாடும் செய்திருந்தார்கள்.

நேரம் செல்லச்செல்ல பதின்மூன்று ஜோடிகளில் ஒவ்வொன்றாக முத்தக் கடலில் தொடர்ந்து நீந்த முடியாது தளர்ந்து போக - ஒரு ஜோடி மட்டும் வெற்றி பெற்றது.

வெற்றி பெற்ற அந்த ஜோடிக்கு என்ன பரிசு கொடுத்தார்கள்...?

நைல் நதிக் கரையிலுள்ள சொகுசு ஓட்டலில் எட்டு நாள் உல்லாசமாக இருக்கலாம். எல்லாச் செலவுகளும் இலவசம்.

இது எல்லாம் ஒரு சாதனையா, நாங்கள் செய்தது தான் கின்னஸ் சாதனை என்று இவர்களை எல்லாம், கின்னஸ் புத்தகத்தில் இருந்தே புரட்டிப் போட்டிருக் கிறார்கள் ஒரு ஜோடி...

அமெரிக்காவில் - கலிபோர்னியா மாநிலத்தில் உள்ள 'பிட்ஸ் பர்க்' நகரில், ரெபிளேசினா என்ற 25 வயது இளைஞனும், பாபிஷெர்லாக் என்ற 21 வயது இளைஞியும் இடைவிடாது இறுகத் தழுவி 190 மணி நேரம் முத்த மழை பெய்து கின்னஸில் இடம் பிடித்தனர்.

நீங்கள், ஒருவரை ஒருவர்த் தழுவித்தானே முத்தமிட்டு 'சாதனை' படைத்தீர்கள்? நான் பலரை முத்தமிட்டு சாதனைப் படைத்திருக்கிறேன் என்பது போல், ஒருவர் செய்த சாதனை இது...

1989-ஆம் ஆண்டு இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஜேம்ஸ்பெல் என்பவர் 8 மணி நேரத்தில் 4,500 பெண்களை முத்தமிட்டு கின்னஸில் இடம் போட் டிருக்கிறார்.

இந்த ஆண் மகன் செய்த சாதனையையும் ஒரு ஆரணாங்கு முறியடித்தாள். ஐந்து மணி நேரத்தில் 5,001 பேருக்கு ஒருவர் முத்தம் கொடுத்ததுதான் உலகச் சாதனையாக இருந்தது.

இந்தச் சாதனையை முறியடிக்க நினைத்தார் ஜெர்மன் நாட்டு நடிகை ஆன்டிரிசுவா.

அதனால், இவர் ஒரு நாள் அவர் தாத்தா, பாட்டி, குழந்தைகள், பெண், ஆண் என்று கண்ணில் பட்ட எல்லோருக்கும் முத்தம் கொடுத்தார்.

ஐந்து மணி நேரத்தில் 10,002 பேருக்கு அவர் முத்தம் கொடுத்தார்.

பழைய சாதனையைவிட ஒரு மடங்கு முத்தம் அதிகமாகக் கொடுத்து இப்போது கின்னஸில் முன் நிற்கிறார்.

உலகிலேயே மிக அதிகமாகப் பெண்களால் முத்தமிடப்பட்ட ஆண் ஒருவர் உண்டு என்றால், அது இவர்தான்...

லியூடெனண்ட் ரிச்மாண்ட் பியர்ஸன் ஹாப்மன், இதுவே அவரது நீண்ட பெயர்.

1898-ஆம் ஆண்டு நடந்த ஸ்பெயின் - அமெரிக்க போரில் கலந்து கொண்ட வீரர், இவர்.

ஒரு நாள் தமது போர் அனுபவங்களைப் பற்றியும், வீர சாகசங்கள் குறித்தும் ஓர் உரை நிகழ்த்தினார்.

பேச்சு முடிந்ததும் அவரது சித்தப்பாவும், பெண்கள் இருவரும் சென்று அவரை முத்தமிட்டனர்.

அவ்வளவுதான்... அங்கே கூடியிருந்த எல்லாப் பெண்களும் க்யூவில் நின்று அவரை முத்தமிட்டனர்.

இந்தச் செய்தி பத்திரிகையில் வெளிவந்தது. அதைப் பார்த்ததும் அவர் போகிற இடத்தில் எல்லாம் பெண்கள் அவரைச் சூழ்ந்து நின்று, முத்தமிட்டு முத்தமிட்டு அவரது முகத்தை எச்சில் அபிஷேகமே பண்ண ஆரம்பித்துவிட்டனர்.

சுமார், பத்தாயிரம் பெண்களாவது தம்மை முத்தமிட்டு இருக்கலாம் என்பது அவரது கணிப்பு.

இன்ப அவதியில்கூட கணக்கெடுத்து கணிப்பு தந்திருக்கும் இவரின் திறமையை என்னவென்று பாராட்டுவது...?

வியப்பான கின்னஸ் முத்தங்களைப் பார்த்த நீங்கள், முத்தத்திற்காக நாக்கையே இழந்தவர்களைப் பார்க்க வேண்டாமா...?

● உடல் நரம்பனைத்தும் உயிர் பெற்று செயலாற்றும் செயலே - முத்தமாகும்.

'மூன்று முத்தங்கள் பாக்கி உள்ளன. இன்னும் அவள் வரவில்லையா...?' இப்படி, தான் இறக்கப்போகும் வேளையில் வேதனைப்பட்டான், மேனாட்டுக் கவிஞன், பைரன்.

இங்கே இருவர் முத்தத்தால் பெற்ற அவதியைப் பார்க்கலாம்...

அமெரிக்காவில் உள்ள எட்மான்டன் நகரைச் சேர்ந்தவர், பாட்ரீசியா மெடொவ்.

இவளுக்கு வயது 22. இவளுக்கும், இவளது காதலருக்கும் இடையே ஒரு நாள் பலத்த வாய்ச் சண்டை நடந்தது.

அச்சண்டைக்கு இடையே மெடோவுக்கு முத்தம் தர முயன்றார், காதலர்.

கட்டிப் பிடித்து கனிமுத்தம் தர காதலியை நெருங்க, அவள் திமிர, ஒரு கட்டத்தில், முத்தம் கொடுக்க வந்த காதலனின் நாக்கைக் கடித்து, துண்டித்துவிட்டாள்.

ஆறு சென்டி மீட்டர் நீளமுள்ள காதலனின் நாக்கை டாய்லெட்டில் எடுத்துப் போட்டு, தண்ணீரைப் பீய்ச்சி விட்டாள். காதலன் மேல் அவ்வளவு ஆத்திரம்.

பிறகு என்ன... காதலன் நீதி மன்றம் போனான், காதலி சிறைக்குப் போனாள்.

மற்றொருவர், முத்தத்திற்காக நாக்கை எப்படி இழந்தார்...?

இயல்பாய், காய் கனியாக வேண்டும். அப்போது தான் கனி சுவையாக இருக்கும்.

அப்படியே இயல்பாய் மனம் கனிந்து பெற வேண்டும் முத்தம். அப்போதுதான் சுவையாக இருக்கும் முத்தம்.

இருவர் மனம் ஒன்றி நான்கு இதழ்கள் சேர முத்தமிட வேண்டும். இதில், ஒருவர் மனம் ஒப்ப வில்லை என்றாலும் முத்தம் தப்பாகிப் போய்விடும்.

அப்படி தப்பான முத்தச் செய்தியே இது...

முத்தம் கொடுக்க வலுக்கட்டாயமாக முயற்சி செய்த கணவனின் நாக்கு நுனியை கொடூரமாகக் கடித்துப் போட்டாள், மனைவி.

அவள் பெயர், ஜெனரால்டின்வான் ஜாண்டிட். வயது 35.

கணவன் நீதி மன்றம் சென்றான். மனைவியை விசாரணை செய்தபோது, அவள் சொன்னாள்...

“என் கணவரான டேவிட், என்னோடு சண்டை போட்டபோது, தவறி தானாகவே கீழே விழுந்தார். அப்போது தானாகவே தன் நாக்கைக் கடித்துக் கொண்டார்...” என்று சொன்னாள்.

அமெரிக்காவின் விஸ்கான்சினில் உள்ள ஜேன்ஸ் வில்லியில் இந்த வழக்கு நடைபெற்றது.

அப்போது, நாக்கைப் பரிசோதிக்க வந்த மருத்துவர்கள், மிகுந்த வலியினால் துடித்த கணவனின் நாக்கில் உள்ள வளைவான காயத்தை பல் இடைவெளி களை வைத்து, இன்னொருவர் கடித்ததுதான் இது என்று நீதிமன்றத்தில் சொல்லிவிட்டார்கள்.

அதைக் கேட்ட நீதிபதி, மனைவிதான் குற்றவாளி என்பதை உணர்ந்து, அவளை சிறைக்கு அனுப்பி வைத்தார்.

முத்தத்தால் நாக்கறுந்ததைப் பார்த்த நீங்கள், இலவசமாக முத்தம் பெற வேண்டுமா...?

அப்படி என்றால் ஓட்டலுக்குப் போங்கள்... எந்த ஊர் ஓட்டலுக்கு என்று கேட்கிறீர்களா? அதுவும் சரிதான்...!

மேலை நாடுகளில் இப்போது பல ஓட்டல்களில் 'கிஸ் சர்வீஸ்'களும் நடக்கின்றன.

அந்த ஓட்டல்களில் நுழைந்து காபிக்கோ, டீக்கோ, மதுவுக்கோ ஆர்டர் கொடுத்தால், காபியோடு ஜில்லென்று ஒரு முத்தத்தையும் கொடுத்துவிட்டுப் போவார்கள், அங்கு உள்ள அழகான பணிப்பெண்கள்.

இப்படி 'கிஸ்' தருவதற்காக ஓட்டல் நிர்வாகம் தனியாக கட்டணம் ஏதும் வசூலிப்பது இல்லை என்பதுதான் முத்தத்தைவிட, கிளுகிளுப்பான செய்தி யாகும்.

● எந்தப் பொருளும்
சேர்க்காமல்
எச்சிலுக்கு
இப்படியோர்
இனிப்பா...? முத்தம்!

‘உடல்வலியா, காய்ச்சலா, நரம்புத் தளர்ச்சியா, இதய நோயா? எதுவாக இருந்தாலும், எங்கள் மருத்துவமனைக்கு வாருங்கள்’ என்றுதான் நம்மூர் மருத்துவமனைகள் அழைப்பு விடுக்கின்றன.

‘மருத்துவமனைக்கு வாருங்கள்...! மகிழ்வாய் முத்தம் பண்ணிவிட்டுப் போங்கள்’ என்று நார்வே மருத்துவமனை ஒன்று அழைப்பு விடுகிறது.

ஆமாம்... நார்வேயின் டிரான்டெரன் நகரின் செயின்ட் ஆலவ் மருத்துவமனை மிகப்பெரிய ஒன்று.

அங்கு தினமும் 100 மருத்துவர்கள், நர்ஸ்களை அவரவர் மனைவி அல்லது கணவர் காரில் வந்து டிராப் செய்வது வழக்கம்.

அப்படி வந்து போகும்போது எப்பப் பார்த்தாலும் நோயாளிகள், ஆம்புலன்ஸ், ஸ்டிரக்சர் என்று எதிரில் வந்து ஜோடிகளைப் பிரிப்பதும், ‘பை’ சொல்ல விடாமலும் இருக்கும்.

வரும்போதே டாக்டர்கள், நர்ஸ்களை மூட் அவுட் செய்யும் இந்தப் பிரச்சனையை சமாளிக்க சிந்தனை செய்தது நிர்வாகம்.

'கிஸ் அண்ட் டிரைவ்' என்ற 400 மீட்டர் தூர வளாகத்தைத் திறந்துள்ளது.

இங்கு காரில் வந்தபடியே தங்கள் துணையுடன் கொஞ்சலாம், முத்தம் பரிமாறலாம்... சில்மிஷமும் செய்யலாம்.

அதற்கு மேல் போகாமல் இருந்தால் சரிதான் என்கிறீர்களா...?

சிலருக்கு தங்கள் தகுதிகளால் இலவசமாகவே முத்தம் கிடைத்துவிடுகிறது...

ஒரு குதிரையோட்டி (ஜாக்கி) பெயர் ரிச்சர்டு.

இவருக்கு பலர் முன்னிலையில், 21 வயது சாரா முத்தமிட்டாள். இவள் இங்கிலாந்து அரண்மனைக் கிளி.

இளவரசி ஆனியின் மகள்; இளவரசர் சார்லசின் மருமகள். டயானா வரிசையில் இவரும் உலக அழகிதான்.

குதிரைப் பந்தயத்தில் வெற்றி பெற்றதற்காக ரிச்சர்டுக்கு பரிசுடன் திறந்தவெளியில் இளவரசி முத்தம் கொடுத்து அசத்தினாள்.

✱

கிரிக்கெட் இரட்டை சதம் அடிப்பவர்கள் உண்டு.

இரட்டை முத்தம் பெற்றவர்கள் அரிது.

இத்தாலிய கதாநாயகன் செர்ஜியோவிற்கு ஒரே நேரத்தில் முத்தமிட்டு அசத்தியவர்கள், நடிகைகள் சியாரா, ஜாக்குலின்.

சினிமாவில், காமிரா முன் நடந்தது இல்லை இது. ஒரு விழா மேடையில்! தகுதிக்குக் கிடைத்த முத்தங்கள் இப்படி.

தனிமையில் இருந்த ஒரு பெண்ணிற்கு முத்த மிட்டு மாட்டிக் கொண்ட ஒரு பணியாளரைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா...?

கொழும்பு செல்வதற்காக சரோஜா (பெயர் மாற்றப்பட்டுள்ளது) என்ற பெண் பன்னாட்டு விமான நிலையத்திற்கு வந்தார்.

பின்னர், விமான நிலைய மேல் தளத்திற்குச் செல்வதற்காக லிப்டில் சென்றார்.

லிப்டின் ஆபரேட்டராக இருந்தவர், அந்தப் பெண் பயணியை லிப்ட்டில் கூட்டிச் சென்றார்.

லிப்ட் நடுப்பகுதியில்சென்று கொண்டு இருந்த போது, திடீரென அந்தப் பணியாளர் அந்தப் பெண்ணைக் கட்டிப்பிடித்து முத்தமிட்டார்.

இதில் அதிர்ச்சியடைந்த அப்பெண், 'என்னைக் காப்பாற்றுங்கள்' என்று கத்தத் தொடங்கினார்.

அதைக் கேட்டு விமான நிலைய ஊழியர்கள் ஓடி வந்தனர்.

முத்தமிட்ட லிப்ட் ஆபரேட்டரைப் பிடித்து உடனே விமான நிலைய மேலாளரிடம் புகார் செய்தனர்.

இதைத் தொடர்ந்து அந்த ஊழியரிடம் இருந்த விமான நிலைய பாஸ் மற்றும் அடையாள அட்டை போன்றவற்றை பறிமுதல் செய்தார்.

பின்னர், அவர் மீது நிர்வாகம் நடவடிக்கை எடுக்கும்படி உத்திரவிட்டார்.

இதைத் தொடர்ந்து அப்பெண் கொழும்பு புறப்பட்டுச் சென்றார்.

● **விதைக்காத நிலமும்
முத்தம் பதிக்காத
இதழும் -
வீண்தான்!**

ஆணுக்கும், பெண்ணுக்கும் முத்தமிடுவதில் சுவையும், சுகமும் தோன்றும் வயது எது...?

இப்படி ஒரு கேள்விக்கு, கலிபோர்னியா பல்கலைக்கழக பேராசிரியர் குரோவிஸ் என்பவர் சொன்ன பதில் இது...

"பெண்ணுக்கு 28 வயது. ஆணுக்கு 24 வயது. இதற்குக் காரணம் பெண்கள் இயற்கையிலேயே நாணம் மிக்கவர்கள். வெட்கத்தை மறந்துவிட்டு அவர்கள் முத்தமிட துணிவதற்கு ஆண்களைவிடச் சில ஆண்டுகள் அதிகமாகின்றன."

இந்த பேராசிரியரின் பதில் இப்படி இருக்க, ஒரு நடிகர் சொல்வதையும் பாருங்கள்...

ஒருமுறை சார்லி சாப்ளினை நிருபர் ஒருவர், "முத்தமிடுவதற்கு சிறந்த நேரம் எது...?"

"சிறந்த நேரமா...? அப்படி ஒரு நேரம் இருக்கிறதா என்ன...? நீங்கள் மட்டும் ஒரு பெண்ணாக இருந்தால், இப்பொழுதுகூட முத்தமிட எனக்கு சிறந்த நேரம் தான்..."

அடுத்த நொடி நிருபர் அங்கில்லை.

முத்தத்தைப் பற்றி இப்போது சில ஆய்வுகளும் வரத் தொடங்கியுள்ளன... அவை அதிசயமான தகவல்களும் தருகின்றன...

முத்தமிடும் ஆண், பெண் உடலெங்கும் ஏராளமான இரசாயன மாற்றங்கள் ஏற்படுகின்றன.

ஓர் ஆண், ஒரு பெண்ணுக்கு இடும் முத்தம் 55 வாட்ஸ் மின்சார சக்தியைத் தரக்கூடியது.

முத்தமிடும்போது 20 நிலமின் பொறிகள் உருவாகின்றன. இவற்றைக் கணிக்கத் தற்போது 'ஓஸோலோ மீட்டர்' என்னும் கருவியே கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

இது இப்படி இருக்க, ஒரு எச்சரிக்கை அறிவிப் பையும் பார்ப்போம்...

'ஆகா...! முத்தம் என்பது எத்தனை இனிய அனுபவம்' என்றுதானே நினைக்கத் தோன்றுகிறது.

கொஞ்சம் வேகமாக உங்கள் சிந்தனையை நிறுத்துங்கள் என்கிறார், மணிலாவைச் சேர்ந்த மருத்துவ நிபுணர் ஒருவர்.

ரேபீஸ் என்பது நாய்கள் மூலமாகவும், பூனைகள் மூலமாகவும்தான் பரவுகிறது என்றுதானே இத்தனை நாட்களும் நினைத்திருந்தோம்...

அது மனிதர்கள் முத்தமிட்டுக் கொள்வது மூலமாகவும் பரவுகிறது...!

115 கேஸ்கள் ஒரு ஆண்டில் மட்டும் மனித முத்தம் மூலமாகவும் பரவியிருக்கின்றன என்று சுட்டிக்காட்டுகிறார்.

இது தவறான ஆளை முத்தமிட்டால் மட்டுமே வரும் ஆபத்து.

சரியான ஆள் என்றால்...? புகுந்து விளையாடலாம்...!

முத்தத்தை முன் வைத்து, இப்போது பிரான்சில் புதிய லிப்ஸ்டிக் ஒன்றையே விற்பனைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

ஆமாம், பல வண்ணங்களில் தயாராகும் அந்த லிப்ஸ்டிக்கில் இனிப்புச் சுவையைச் சேர்த்து தயாரித்துள்ளனர்.

அதைத் தடவியுள்ள பெண்கள் முத்தமிட்டால், முத்தம் இரண்டு மடங்கு இனிப்பாக இருக்கும் என்று விளம்பரம் வேறு செய்தார்கள்.

ஆனால், எதிர்பார்த்த அளவுக்கு அந்த லிப்ஸ்டிக் விலை போகவில்லை.

முத்தச்சுவையை முந்தக்கூடிய சுவை இந்த உலகில் ஒன்றுமில்லை என்பதை அவர்கள் ஏன் அறியாமல் போனார்கள்....

● இரவென்ன,
பகலென்ன
எப்போதும்
இனிக்கும்,
முத்தம்!

ஆந்திர மாநிலம் குண்டூரைச் சேர்ந்தவர் லட்சுமி. வயது 40. இவர் ஆந்திராவில் உள்ள அரசு மருத்துவ மனையில் நர்சாக வேலை செய்கிறார்.

தீ விபத்தில் கை மற்றும் கால்கள் இவருக்கு கருகிப் போயின. அதற்காக பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை செய்ய சென்னை ஸ்டான்லி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருந்தார். இவர் அழகாக இருப்பார்.

அதனால், மருத்துவமனை காவலாளி கந்தப்பன் (40) தினமும் மணிக்கணக்கில் லட்சுமியிடம் பேசிக்கொண்டு இருந்திருக்கிறார்.

இந்நிலையில், ஒருநாள் அதிகாலை 4.30 மணிக்கு மருத்துவமனையில் லட்சுமி தூங்கிக் கொண்டிருக்க அங்கே பதுங்கி பதுங்கி வந்த கந்தப்பன் லட்சுமியைக் கட்டிப்பிடித்து முத்தம் கொடுத்தார்.

அந்த அதிர்ச்சியில் லட்சுமி அலறி அடித்து எழுந்தார். இவரது அலறலைக் கேட்டு பணியில் இருந்த நர்சுகளும், படுத்திருந்த நோயாளிகளும் ஓடி வந்தனர்.

செய்தி அறிந்த அவர்கள், கந்தப்பனுக்கு தர்ம அடி போட்டதோடு, ஸ்டான்லி மருத்துவமனை காவலர் களிடம் ஒப்படைத்தனர்.

மருத்துவமனையில் இப்படி... அடுத்து ஒரு விழாவில் நடந்தது எப்படி...?

ஆந்திர தலைநகர் ஐதராபாத்தில் உள்ள முக்கியமான வர்த்தகப்பகுதி அமீர்பேட்டை.

இங்கு ஏராளமான வர்த்தக நிறுவனங்கள் உள்ளன. இங்கு ஒரு புதிய துணிக்கடை திறப்பு விழா நடந்தது.

இதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு புதிய கடையைத் திறக்க பிரபல தெலுங்கு பட கதாநாயகி வந்திருந்தார்.

கடைக்குள் நுழைந்த நடிகைக்கு பூங்கொத்து கொடுப்பதற்கு சீனிவாஸ் என்ற ரசிகர் நெருங்கி வந்தார்.

பூங்கொத்தை கையில் கொடுத்த சீனிவாஸ் திடீரென நடிகையை கட்டியணைத்தார். நடிகையின் உதட்டில் 'இச் இச்' என்று முத்தம் கொடுத்தார்.

இதைப் பார்த்ததும் கடை உரிமையாளரும் அங்கு கூடியிருந்தவர்களும் அதிர்ச்சி அடைந்தனர்.

அப்போது சீனிவாஸ் பிடியில் இருந்து நடிகையை மீட்க காவலர்கள் முயன்றனர்.

ஆனால், அவர்களால் அவரைப் பிரிக்க முடிய வில்லை.

நடிகையை சீனிவாஸ் இறுக்கமாக கட்டிப்பிடித்து கண்களை மூடிக்கொண்டு தொடர்ந்து 'இச்... இச்' என

நடிகையின் உதட்டில், முகத்தில் முத்தம் கொடுத்தபடி இருந்தார்.

சீனிவாஸின் பிடியில் இருந்து தப்ப நடிகை செய்த முயற்சியும் பலனளிக்கவில்லை.

சீனிவாஸ் தனது பிடியை இறுக்கியதில் நடிகைக்கு மூச்சு திணறியது.

சில நிமிட போராட்டத்துக்கு பிறகு நடிகையை காவலர்கள் மீட்டனர்.

பிறகு, அந்த நடிகை உடனடியாக அங்கு இருந்து வெளியேறி, காரில் ஏறி தனது வீட்டுக்குப் பறந்து விட்டார்.

25 வயத சீனிவாஸுக்கு தர்ம அடி தாராளமாகவே விழுந்தது. பிறகு அவர் போலீஸிடம் ஒப்படைக்கப் பட்டார்.

சீனிவாஸ் முத்தமிட்ட நடிகை யார்...? அதை தெரிவிக்க போலீசார் மறுத்துவிட்டனர்.

ஒரு ரசிகரால், ஒரு நடிகைப்பட்ட பாட்டை பார்த்த நீங்கள் அடுத்து ஒரு நடிகை கொடுத்த முத்தத்தால் விளைந்த விபரீதத்தைப் பார்க்க வேண்டாமா...?

ஈரான் நாட்டைச் சேர்ந்த நடிகை கெய்ரான்டிகம். இவர், தலைநகர் டெக்ரானில் நடந்த ஒரு பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டார்.

அந்த விழாவில் இயக்குநர் அலிஜமானிக்கு நடிகை பரிசு வழங்கினார்.

அப்போது உணர்ச்சி வசப்பட்ட நடிகை இயக்குநரைக் கட்டிப்பிடித்து அவரது நெற்றியில் முத்தம் கொடுத்தார். கையைப் பிடித்துக் குலுக்கினார்.

இந்த செயல் விழாவுக்கு வந்த பலருக்கும் அதிர்ச்சியை அளித்தது. கட்டுப்பாடு மிகுந்த ஈரான் சமூகத்தில் இதுபோன்ற நடவடிக்கைகளுக்கு அனுமதி கிடையாது.

இதனால், மத தீவிரவாதிகள் நடிகைக்குத் தண்டனை வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இதைத் தொடர்ந்து நடிகைக்கு 75 கசையடி கொடுக்கும்படி நீதிமன்றம் உத்திரவிட்டது.

இதைக் கேள்விப்பட்டு அதிர்ச்சியடைந்த நடிகை, நடந்த சம்பவத்துக்கு வருத்தம் தெரிவித்து பகிரங்க மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

இதைத் தொடர்ந்து அவருக்கு விதிக்கப்பட்ட தண்டனை ரத்து செய்யப்பட்டது.

● முத்தோ
கழுத்தணி!
முத்தமோ
இதழணி!

முத்தத்திற்கென்று நீண்ட நெடிய வரலாறுகள் உண்டு.

ஒவ்வொரு நாட்டிலும் முத்தத்திற்கு என்றே அற்புதமான நிகழ்ச்சிகளும், முத்தத்தைவிட சுவையான செய்திகளும் உண்டு.

ஆணும் பெண்ணும் தங்கள் இதழ்களை 'முத்தக் கவிதை' எழுத விடும்போது, உடலில் என்ன என்ன மாற்றங்கள் ஏற்படுகின்ற என்பதற்கான குறிப்புகளும், ஆய்வுகளும் நிறம்பவே உண்டு.

பருவத்தினர் மட்டும்தான் முத்தம் இட வேண்டும் என்பது இல்லை. 'பழ'ங்களும் வாரி வழங்கலாம் முத்தம்.

இளைய இதழ் சேரும் முத்தங்களில் மட்டுமல்ல. முதியவர்களின் இதழ் சேரும் முத்தங்களிலும் இன்பத் தேன் வடியத்தான் செய்யும்.

நீங்கள் வேண்டுமானால் முதியவர்களிடம் கேட்டுப்பாருங்கள்... உண்மையின் ஊர்வலம் இன்பமாய் ஓடிவரும்.

பேசுவதற்கும், சிரிப்பதற்கும் மட்டும் இதழ்களை இறைவன் படைக்கவில்லை.

“முத்தமிடுவதற்குத்தான் இதழ்களைப் படைத்தார் - இறைவன்” என்கிறார், உலகப் புகழ்பெற்ற நாடக மேதை, ஷேக்ஸ்பியர்.

‘உப்புச் சுவையை பரஸ்பரம் பரிமாறிக் கொள்ளும் விதமாகவே, முத்தமிடுதல்’ துவங்கியது என்கின்றனர், ஆய்வாளர்கள்.

அன்பை வெளிப்படுத்தும் அடையாளமாக முத்தமிடுவதை ஏற்றுக் கொண்ட முதல் நாடு, பிரான்ஸ் தான்.

முந்தைய நாளில் நடன நிகழ்ச்சிகள் புகழ் பெற்றிருந்தன. ஒவ்வொரு நிகழ்ச்சியின் இறுதியிலும் முத்தங்கள் ஏராளமாகவும், தாராளமாகவும் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

இந்த முறை பிரான்சில் இருந்து உலகின் மற்ற நாடுகளுக்குப் பரவியது.

முத்தமிடுதலுக்கு ஆங்கிலத்தில் சொல்லப்படும் ‘கிஸ்’ எனும் வார்த்தை ‘கிஸ்ட்’ என்ற வார்த்தை யிலிருந்துதான் வந்தது.

ஜப்பான் நாட்டைச் சேர்ந்த டாக்டர் டோமோச புரேர், ‘இரத்த ஓட்டத்தை முத்தம் அதிகரிக்கிறது. இதனால், இரத்தம் தூய்மையாகி உடலுக்கு சுறுசுறுப்பைத் தருகிறது. நோய் இல்லாத நீண்ட வாழ்வு இதனால் தொடரும்.

கண்கள் ஒளி பொருந்தியதாகவும், முகப் பொலிவும் கூடுகிறது. முத்தமிடும்போது சுரக்கிற உமிழ் நீரில் ஏராளமான ஹார்மோன்கள் வெளிப்பட்டு, மற்றவருடைய இரத்த ஓட்டத்தில் கலந்து மனிதர்கள் மூப்படைவதைத் தடுக்கிறது...' என கூறுகிறார்.

தாம்பத்தியத்தில் முத்தத்துக்கு முன்னுரிமை கொடுக்கும் தம்பதியினரிடம் பல் மற்றும் ஈறு தொடர்பான நோய்கள் குறைவாக இருப்பதாகவும் கண்டறிந்திருக்கின்றனர்.

இதற்குக் காரணம், அப்போது உமிழ்நீர் அதிகம் சுரந்து வாயை சுத்தப்படுத்துவதுதான்.

உமிழ் நீர் அதிகம் சுரப்பதால் அவர்களுக்கு ஜீரணக் கோளாறுகள் இருக்காது.

சிரிக்கும்போது உடல் தசைகள் நெகிழ்கிறது. இரத்த ஓட்டத்தில் உத்வேகம் பிறக்கிறது. நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கிறது. இதைவிட உடலில் பல நல்ல வேதியியல் மாற்றங்களை உருவாக்கி இதயத் துடிப்பை அதிகரிக்கிறது, முத்தம்.

குழந்தைக்கு தாய் கொடுப்பது, காதலனுக்கு காதலி கொடுப்பது, கணவன் - மனைவிக்கு கொடுப்பது, இந்த முத்தங்களில் காதல் ஜோடிகள் கொடுத்துக் கொள்ளும் முத்தத்தின் போதுதான் அபரிமிதமான மின்சார சக்தி உடலுக்குக் கிடைக்கிறது.

கணவனும், மனைவியும் முத்தமிடும்போது 10 முதல் 25 தசைகள் வரை செயல்பட்டு முகம் பொலிவு பெறுகிறதாம்.

அதுவே காதலர்கள் என்றால், *15* முதல் *35* தசைகள் நெகிழ்கிறதாம்.

அமெரிக்காவில் சியாட்டில் நகரில், முத்தமிடுதல் பற்றி பயிற்சி கொடுக்கவே ஒரு கல்லூரி உள்ளது.

இங்கு புதுமணத் தம்பதிகளுக்கு 'முத்தமிடுதல் பற்றி பயிற்சி' தருகின்றனர் என்பது கூடுதலான செய்தியாகும்.

●

- உடல் கூட்டின்
உற்சாகப் பெருவிழா
முத்தம்!
தோலின்றி பழமா...?
அலையின்றி கடலா...?
முத்தமின்றி வாழ்வா...?

'முத்தம்' என்பது சாதாரண செயல்பாடு இல்லை. அதை சாதாரணமாக பயன்படுத்தவும் கூடாது.

நிலத்தை உழுது பண்படுத்தி, நீர் பாய்ச்சி விதையை விதைப்பதுபோல், உடலையும், மனதையும் சீர்படுத்தி, முத்தமென்ற விதையை விதைக்க வேண்டும்; பதிக்க வேண்டும்.

அப்போதுதான், விளைச்சல் என்ற மகிழ்ச்சி வெகுவாகப் பெருகும்.

முத்தம் என்ற நான்கு எழுத்து வார்த்தையை எப்படி வாழ்வில் பயன்படுத்த வேண்டும்...? எப்போது முத்தமிட வேண்டும்...? எந்தச் சூழ்நிலையில் முத்தமிட வேண்டும்...? என்பது பற்றி எல்லாம் இங்கே காணலாம்...

'இன்பத்தின் திறவுகோல் முத்தம்' என்பர். முத்தமிடும் வகைகள் பல. முறைகள் பல. சந்தர்ப்பமும் நபர்களும்கூட வேறுபடும்.

ஆனால், கருத்தொருமித்த காதலர்களும், கணவன், மனைவியும் முத்தத்தின் பதிவுகளைப் பதிக்கும்போது ஏற்படும் பலன்கள் அலாதியானவை.

முத்தமிடும் முறைகள் பலவாயினும் அவற்றால் ஏற்படும் பலன் ஒன்றுதான்.

ஒரே ஒரு முத்தம் உதட்டோடு உதடுகளைப் பொருத்தும் ஒரு சிறு நிகழ்ச்சி.

அது மனித வாழ்க்கையைச் சொர்க்கமாக ஆக்கிவிடும் வல்லமை பெற்றது.

காமச் சுவையை அதிகரிக்கவும் கலவி இன்பத்தின் உச்சகட்டத்தை எட்டிப் பிடிப்பதற்கும் தயாராகும் முதல் செயல்தான் முத்தமிடுவதாகும்.

உறவு வேட்கையை முத்தம் தூண்டி விடுகிறது. கலவியில் முடியப்போகும் இன்ப நிகழ்ச்சிக்கு உதடுகளில் இடப்படும் முத்த முத்திரைதான் ஆரம்ப ஒத்திகையாக அமைகிறது.

அந்த ஒத்திகை சரியாக அமைந்துவிட்டால், உறவு நாடகம் முழுவதும் தங்குதடையின்றி நடந்து விடும்.

முத்தமிடுவதை சிலர் ஒரு வெறும் சடங்காக எண்ணிக்கொண்டு, தங்கள் உதடுகளை மனைவியின் முகத்தில் எங்காவது பதித்துவிட்டால் போதும் என்று நினைக்கின்றனர். இது தவறு, மிகத்தவறு.

பெண் உணர்ச்சிகளின் கோளம். கலவியின் போது அவள் தன் மனதையும், உடலையும் ஒரு நிலைப்படுத்தி தன்னைப் பரிபூரணமாக ஆணிடம்

ஒப்படைக்கும்போது அதற்குத் தக்க விதத்தில் ஆணும் செயல்பட வேண்டும்.

முத்தமிடும்போது ஆண் முதலில் தன் உதடு களைப் பெண்களின் உதடுகளில் பதிய வைத்த பிறகுதான் பெண்ணுக்கும் முத்தமிடுவதில் ஆர்வம் பிறக்கும்.

முத்தமிடத் தொடங்கும்பொழுது முதலில் மெதுவாகவும், சிறிது நேரம் நீடித்திருக்கும் படியும் ஆரம்பிக்க வேண்டும்.

கலவியில் விருப்பம் அதிகரிக்க அதிகரிக்க முத்தத்தின் அழுத்தமும் நேரமும் அதிகரிக்கும்.

ஆரோக்கியமும், ஆர்வமும் உள்ள பெண்கள் எப்போதும் அழுத்தமாக முத்தம் பதிப்பதையே விரும்புவார்கள்.

தங்களைக் கட்டிப் பிடித்து கசக்கிப் பிழிந்து சாறு எடுப்பதுபோல் அழுத்தி முத்தமிடுவதையே விரும்பு வார்கள்.

இங்கே முக்கியமாக ஒன்றைக் கவனிக்க வேண்டும். ஆண், பெண்ணை முத்தமிடும்போது சுத்தமாக ஷேவ் செய்து முகத்தை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

முகத்தில் முடிகள் இருந்தால் பெண்ணின் கன்னங்களை உறுத்தித் துன்பத்தைக் கொடுக்கும்.

பெண்களுக்கு அளவுடன் வளர்க்கப்பட்ட குறுந்தாடிகள் உராய்வது இன்பத்தை அளிக்கும்.

ஆனால், பெரும்பாலான பெண்கள் விரும்புவது ஷேவ் செய்து மழமழப்பாக இருக்கும் முகத்தைத்தான்.

மேலும், ஆண்களும் பெண்களும் சரி. முத்தம் இடுவதற்கு முன்னர் ஒருமுறை பற்களைச் சுத்தமாக விளக்கி கறைகள், அழுக்குகள், உணவுப் பொருள் களின் துகள்கள் வெற்றிலைக் காவி, சிகரெட் நாற்றம் ஆகியவற்றை அகற்றிப் பற்களைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். வாய் நாற்றந்தான் முத்தத்தின் முதல் எதிரி என்பதை உணர்தல் வேண்டும்.

முத்தமிட நெருங்கும் கணவனையோ, மனைவி யையோ வாய் நாற்றம் இருந்தால் விரட்டி விடும்.

வாய் நாற்றம், வாயில் அழுக்கு சேருவதால் மட்டுமல்ல, மலச்சிக்கல் ஜீரணக்குறைவு, அதிக சூடு, புகைப் பழக்கம், மதுப்பழக்கம், அசைவ உணவு வகைகள் ஆகியவற்றிலும் ஏற்படலாம்.

ஆணும், பெண்ணும் முத்தமிடுவதற்கு முன்னர் வெற்றிலைப் பாக்குப்போட்டு, அதைத் துப்பிவிட்டுச் சுத்தமான நீரால் வாயைக் கொப்பளித்து விடுவது நல்லது.

சில புத்திசாலிப் பெண்கள் வாயை மணக்கச் செய்யும் வாசனைத் திரவியங்களைத் தங்கள் உதடுகளின் ஓரங்களில் தடவிக் கொள்வதும் உண்டு.

ஏனென்றால், வாசனைத் திரவியங்களுக்கு இன்பச் சுமையை அதிகப்படுத்தும் சக்தி உண்டு.

ஆண் - பெண்ணின் கீழ் உதட்டைத் தன் உதடுகளால் மெதுவாகக் கவ்விக் கொள்ள வேண்டும்.

பின் தன் உதடுகளுக்கு இடையில் சிக்கி லேசாக நடுங்கும் பெண்களின் உதடுகளை உடனே

விட்டுவிட்டு மீண்டும் அதே நிலையை உருவாக்க வேண்டும்.

அந்த நிலையிலும் பெண் சிறைப்பட்ட தன் உதடுகளை விடுவிப்பதா, வேண்டாமா என்ற தெளிவற்ற மன நிலையில் வெளியே வெட்கமும், உள்ளூர அப்படியே இருக்கட்டும் என்ற ஆசையும் உந்தித் தள்ள, ஓர் இன்பமயமான நிலையில் தள்ளாடுவாள். ஆணுக்கு வெற்றி நிச்சயம். ஏன்...? பெண்ணுக்கும்தான்.

எனவே, கணவன் - மனைவி இருவரும் முத்தத்தைச் சரியாகப் புரிந்து உணர்ந்து இல்லறத்தை இனிதாக்க வேண்டும் என்பதே நம் எண்ணம்.

★ அன்பின் பெருக்கே
அரும்பும் முத்தம்!

இன்று தமிழ்த் திரைப்படங்களில் காதலன் - காதலி சந்திப்பின்போது பேசிக் கொண்டிருக்கிறார்களோ, இல்லையோ, ஒட்டி உறவாடி நிற்பதோடு, முத்தம் கொடுக்காமல் இருப்பதில்லை.

பெரும்பாலான படங்கள் அதனால்தான் நீண்ட நாள் ஓடுகிறது என்றும் கூறுகிறார்கள்.

தமிழ்த் திரையுலகில் இந்த முத்தக் காட்சிகள் என்று தொடங்கியது?

முத்தக் கலையை முதன் முதலில் பதித்தப் படம் 'மேனகா' தான்.

முத்தக்காட்சியையும், ஆண் பெண் நெருக்கத்தையும் துணிந்து காட்டிய இயக்குநர் ராஜா சாண்டோதான்.

1935-இல் வெளிவந்த இந்தப் படத்தில் கதாநாயகனாக நடித்த டி.கே.சண்முகம், தன் காதலியாக நடித்த டி.கே.ருக்மணிக்கு முத்தமழையே பொழியும்படி செய்தார், சாண்டோ.